புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒவ்வோர் ஆண்டும், கிட்டத்தட்ட 20 இலட்சம், 40 இலட்சம் மக்கள் பயன்பெறக்கூடிய வகையிலே, பல்வேறு கூட்டுக் குடிநீர் திட்டங்களைக் கொண்டு வருவதோடு மட்டுமல்லாமல், அந்தந்தப் பகுதியினுடைய தேவைகளை அறிந்து, ஆங்காங்கே இருக்கின்ற நீர் ஆதாரங்களை வைத்துக்கொண்டு, தனி மின்விசையின் மூலமாகக் குடிநீர் விநியோகம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். எனவே, தற்போது உள்ள மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படிதான் குடிநீர் வடிகால் வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 198, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

198—

பட்டுப் புழு வளர்ப்பு மையம்

***23932**—**திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரி தொகுதி, சங்ககிரியில் பட்டுப் புழு வளர்ப்பு மையங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) ஆம்.

(ஆ) சங்ககிரி தொகுதியில், பட்டு விவசாயிகள் வெற்றிகரமாக பட்டுக்கூடு அறுவடை செய்ய ஏதுவாக, இளம் பருவ பட்டுப் புழுக்களை வளர்த்து விவசாயிகளுக்கு விநியோகிக்கும் இளம் புழு வளர்ப்பு மையங்களைச் செயல்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என்பதனைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2013 ஏப்ரல் 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.*

திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். எனது சங்ககிரி தொகுதியில் விவசாயிகளுக்கு விநியோகிக்க இளம் புழு வளர்ப்பு மையங்கள் செயல்படுத்துவதற்காக, அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே கூறினார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டு விவசாயிகளுக்கு அரசு எந்தவிதமான உதவிகளைச் செய்து வருகிறது என்பதனையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ப. மோகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்ககிரி தொகுதியில், மகுடஞ்சாவடி ஒன்றியத்தில், கண்ணந்தேரி கிராமத்தில் இளம் கூட்டுப் புழு மையம் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சங்ககிரியிலிருந்து 20 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள தொப்பக்காடு கிராமத்திலேயும் தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின்மூலமாக இளம் பட்டுப் புழு வளர்ப்பு மையம் இன்றைக்கு சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதேபோன்று எடப்பாடி, தொப்பக்காடு, இருப்பாளி, கொங்கணாபுரம், கொல்லம்பட்டி ஆகிய பகுதிகளில் பட்டு வளர்ச்சி மிகச் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, அந்தந்தப் பகுதிகளிலே பயிரிடுபவர்களுக்காகப் பல்வேறு மானியங்கள், 30 ஆயிரம் ரூபாய் என்கிற வகையிலே அரசின் சார்பாக வழங்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இப்போது அதை 35 ஆயிரம் ரூபாயாக உயர்த்தித் தந்திருக்கிறார்கள். அதேபோன்று, பல்வேறு வகைகளில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, நடவடிக்கை எடுத்திருக்கிறது. பட்டுப் புழுவை வளர்ப்பதற்காகப்*

பல திட்டங்களின் அடிப்படையில், ஏக்கருக்கு மானியத்தை ரூ.4,125/–லிருந்து ரூ.6,750/– ஆக உயர்த்தியும் இந்தத் துறை சிறப்பாகச் செயல்படுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள் என்பதனைத் தங்கள்வாயிலாக உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.

திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய விளக்கத்திற்கும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன், நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.

திரு. மு.வீ. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் நல்லாட்சி நடத்திவரும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாட்சியில் சோழவந்தான் தொகுதிக்குட்பட்ட அலங்காநல்லூர் பகுதியில் மக்கள் நலன் கருதி எதிர்காலத்தில் பட்டுப் புழு வளர்ப்பு மையம் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களின் வேண்டுகோளை ஏற்று, அங்கு அரசு அலுவலர்களை அனுப்பி, ஆய்வு செய்து, அப்பகுதியில் பட்டுப் புழு வளர்ப்பு மையம் தேவையிருப்பின், மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று, நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தத் துறை குறித்து மேலும் சில விளக்கங்களைச் சொல்ல விரும்புகிறேன். உலகளவில் பட்டு உற்பத்தியில் சீனாதான் முதலிடத்தில் இருக்கிறது. சீனாவில் 79.1 சதவிகிதம் உற்பத்தி

2013 ஏப்ரல் 10]

செய்யப்படுகிறது என்பதையும், பட்டு உற்பத்தியில் இரண்டாவது இடத்தில் இருக்கும் இந்தியா 17.5 சதவிகிதம் உற்பத்தி செய்கிறது என்பதையும் நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று, இந்தியாவினுடைய தேவை 29,000 மெட்ரிக் டன் என்பதையும், உற்பத்தி 23,000 மெட்ரிக் டன் என்பதையும், எஞ்சியுள்ள 6,000 மெட்ரிக் டன் பட்டினை சீனாவிலிருந்துதான் நாம் இறக்குமதி செய்துகொண்டிருக்கிறோம் என்பதையும் நான் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

அதுமாத்திரமல்ல, சராசரி பட்டுக்கூடு உற்பத்தித் திறனில், இளம் பட்டுப் புழுக்கள் உருவாக்கத்தில் தேசிய அளவில் தமிழகம் முதல் இடத்தில் உள்ளது என்பதனை நான் இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்லாது, வெண்பட்டு உற்பத்தியில் 592 மெட்ரிக் டன் உற்பத்தி செய்து, தேசிய அளவில் தமிழ்நாடு தொடர்ந்து முதல் இடத்தில் இருக்கிறது என்பதனை நான் பணிவன்போடு தெரிவித்து விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 199, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா, மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

199—

அங்கன்வாடி மையம்

***22076—திரு. டி.ஆர்.பி. ராஜா:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி தொகுதி, காளாச்சேரி ஊராட்சியிலுள்ள அங்கன்வாடி மையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*